பக்கங்கள் 8 ★

ஈழநாடு The EELANAADU 50 சதம்

மலர் 22 பங்குனி 13 ஜ-அவ் 8 இதழ் 45
புதன்கிழமை 26-3-80

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1980-3-26 PERIODICALS DIVISIONS LIBRARY

# எம். ஜி. ஆர். பயணம்செய்த ரயில் பெட்டி மீது தாக்குதல்!

[திருச்சி]

தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் நேற்றுப் பிரயாணம் செய்த ரயிலின் பெட்டியொன்று, தாக்குதலுக்குள்ளானது!

திரு. எம் ஜி ராமச்சந்திரன் நேற்று, சென்னையிலிருந்து மதுரை நோக்கிப் புறப்பட்ட 'பாண்டியன் எக்ஸ்பிரஸ்' ரயிலில் திருச்சிக்கு பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இந்த கடுகதி ரயில் விருத்தாசலம் ரயில் நிலையமருகே வந்த போது, விஷமிகளின் சதித்திட்டம் காரணமாக ரயிலை இடைநடுவே நிறுத்தவேண்டியசூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது, சிலர் கூட்டமாக ரயிலருகே வந்து, திரு எம் ஜி ராமச்சந்திரன் பிரயாணம் செய்த பெட்டியைக் கடுமையாகத் தாக்கினர். இதுசம்பந்தமாக திருச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

★ யாழ்.லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரி

# தரம் உயரும்!

(யாழ்ப்பாணம்)

''யாழ்.லங்காசித்த ஆயுர்வேதக் கல்லூரியை அரசாங்கக் கல்லூரியின் அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்''

யாழ் லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரி பொன்விழா பொருட்காட்சியை நேற்று மாலை திறந்துவைத்துப் பேசிய ஆயுர்வேத ஆணையாளர் திரு. பி. வி. வன்னிநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வன்னிநாயக்காவும், பாரியாரும் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாகக் கல்லூரிக்கு அழைத்துவரப்பட்டனர். வட இலங்கை சுதேச வைத்தியசபை செயலாளரும் கல்லூரி உப அதிபருமான திரு சுகந்தன் இன்னாசித்தம்பியும் பாரியாரும் அவர்களை வரவேற்றனர்.

இவ்வைபவத்தில் திரு. வன்னிநாயக்கா மேலும் பேசுகையில் கூறியதாவது: ''இக்கல்லூரிதான் இலங்கையில் உருவான முதலாவது ஆயுர்வேத ஸ்தாபனமாகும். இவ்விழாவில் பங்குபற்றுவதையிட்டு நான் பெருமையடைகிறேன். இக்கல்லூரிவளர்ச்சிக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன்'' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. ஆர். ஈ. டபிள்யூ. ஜெகோரத்தினம் கல்லூரி தோற்றமும் வளர்ச்சியும் பற்றி உரையாற்றினார். கல்லூரி விரிவுரையாளர் திரு. ஏ. வி. இராசரத்தினமும் உரையாற்றினார். (க)

# நிரந்தரமாக தங்குவதற்கு ஷா இணக்கம்

[கெய்ரோ]

புகலிடம் அளித்துள்ள எகிப்தில், நிரந்தரமாகத் தங்குவதற்கு ஈரானிய ஷா நேற்று இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேநேரத்தில் ஷா எகிப்து சென்றதை ஆட்சேபித்து, தெஹ்ரானில் முற்றுகையிடப்பட்ட அமெரிக்கத் தூதரகம் முன்பாக நேற்றுக்காலை 30,000 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பெண்களும் அதிகமாகக் காணப்பட்டனர்

புதிய ரயில் சேவை:

# முதல்நாளே 110நிமிட தாமதம்!

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் ஆரம்பமான காங்கேசன்துறை — கொழும்பு இரண்டாவது ரயில் சேவைமுதல்நாளிலேயே நேற்று நூற்றிப்பத்து நிமிடங்கள் தாமதித்து யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டது.

காங்கேசன்துறையிலிருந்து குறிப்பிட்ட நேரத்துக்கு, முதல்நாளான நேற்று முன்தினம் புறப்பட்ட புதிய இரவு கடுகதி ரயிலின் என்ஜினில் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம் ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஒன்

(8-ம் பக்கம் பார்க்க

# பிரான்ஸ் அணுசோதனை

[பாரிஸ்]

பிரான்ஸ் நேற்று பசுபிக் சமுத்திரத்தில் அணுசோதனை நடத்தியது. 1945ல் ஹீரோஷிமாவில் வெடிக்கப்பட்ட அணுகுண்டைவிட இருமடங்கு சக்திவாய்ந்தது இது என்று அறிவிக்கப்பட்டது.

# தேர்தல் கூட்டு நீடிக்கும்

(சென்னை)

தி மு க. — இந்திரா காங்கிரஸ் தேர்தல் கூட்டில் எந்தவித மாறுதலும் ஏற்படமாட்டாது என்று தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் நேற்றுத் தெரிவித்தார். இன்று இவர் திரு. கருணாநிதியைச் சந்திக்கின்றார்.

## ஒரு நாள் வாக்குப்பதிவு

(சென்னை)

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் ஒரே தினத்தில் வாக்குப்பதிவு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பூசகர் தேவை

எழுவைதீவு முருகன் கோயிலுக்கு பூசகரொருவர் தேவை. 5-4-80க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

செ. மா. பரமலிங்கம்,
பொதுச்செயலாளர்,
41/2, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(5312)



வண்ணார்பண்ணை ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவில் நிதிக்காக, இசைவிருந்தளிக்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த உலக இசைமேதைகள், பண்டிதர் ரவிசங்கர், உஸ்தாத் அல்லாரக்கா, யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் நேற்றுப்பகல் வந்திறங்கியபோது பிடிக்கப்பட்டபடம். படத்தில் ரவிசங்கர் தம்பதிகள், உஸ்தாத் அல்லாரக்கா, கமலா சக்கரவர்த்தி ஆகியோருடன் சிக்மா பம்ப்ஸ் இயக்குநர் திரு. ராம் குமாரசாமி, திருமதி ராம் குமாரசாமி, திரு எஸ். தியாகராசா ஆகியோரும் காணப்படுகின்றனர். இம்மாபெரும் இசை விருந்து சிக்மா பம்ப்ஸ் தயாரிப்பாளர்களான 'நாவற்குழி யுனைட்டெட் அக்ரோ என்ஜினியரிங் ஸ்தாபனத்தினரின் ஆதரவில் இன்று மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.




யப்பானில் தயாரிக்கப்பட்டு தன்னிகரற்று விளங்கும்
கசட் ''மக்சல்'' இன்று உலகில் அதிகம்
விற்பனையாகும் கசட் ''MAXELL''
''Maxell'' குடும்பத்தின் அங்கத்தவர்கள்

★ Maxell LN - C 60, LN - C 90, LN - C 46
★ Maxell UD 60, UD 90
★ Maxell UDXL II 60, UDXI ii 90
★ Maxell Video Cassette E 120, E 180
★ Maxell எலக்ட்ரோனிக் கைக்கடிகார, கமெரா பற்றறிகள்
★ Maxell கல்குலேட்டர் பற்றறிகள்
★ Maxell Spool tapes - LN, UD, UDXL II and Professional
★ Maxell பற்றறிகள் (Penlight, Medium, & Standard)

எல்லா பிரபல விற்பனையாளரிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.
மொத்தமாக பெற நாடவேண்டிய இடம்:

WILLIAM TRADING Co.,
Hasthigiri Building, 2nd Floor
124, DAM STREET, COLOMBO -,12:
Telephone: 22475

# விசாரணைகள் பூர்த்தி

(வண்ணார்பண்ணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரைகளை வழங்குவதற்கான விசாரணை கடந்த 21ம் திகதி முதல் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெற்றன.

சுமார் இருநூற்றுக்குமதிகமானவர்களது மேன்முறையீடுகள் இந்த விசாரணையில் ஆராயப்பட்டன. இவ்விசாரணைகளை யாழ். மாவட்ட அமைச்சைச் சேர்ந்த கணக்காளர் திரு. எஸ். திருநாவுக்கரசு, மாவட்டக்காணி உத்தியோகத்தர் திரு. எம். எம். குணநாயகம் ஆகியோர் நடத்தினர். (கு)

வெண்காய விதை

பம்பாய் வெண்காய செய்கையாளர்களுக்கு ஓர் வேண்டுதல். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்திய அரசால் அத்தாட்சி பெற்ற

பூசா ரெட் ரக வெண்காய விதை

இன்னும் சில தினங்களுள் கிடைக்கும்.
உங்கள் தேவைக்கு முன்னதாகவே பதிவு செய்யுங்கள்.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(5299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் இலங்கை வங்கிக்கு முன்பாக இரண்டு கடைகள் கட்டிக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும்: கே ஆர். கந்தசாமி அன் கோ, 69/1, பசார் வீதி, வவுனியா 5296

## பயிற்சி

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் தொழில்கள் பெறுவதற்கான பயிற்சிகள் வெல்டிங் (Electric & Gas நவீன முறையில் 3 மாதம், வயறிங் (IEE முறைப்படி) 3 மாதம் P M G (Radio Officers Course) -6 மாதம், Building Construction & Draughtsmanship Transistor Techrology முதலிய பல பயிற்சிகள். எல்லா விபரங்களையும் தரும் இலவச கையேட்டிற்கு உடன் விண்ணப்பிக்கவும். தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் (National Institute of Engineering Technology) 57, 59, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 5305

சின்னத்துரை கனகரத்தினம்,
ஜே. பி. யூ. எம்.,
கனகரத்தினம் கேசவன்,
சட்டத்தரணிகளும்,
பிரசித்த நொத்தாரிசும்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

இல: 74, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் இடத்தைச் சேர்ந்த சின்னையா மார்க்கண்டு என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினது விடயத்தில்.
- மரணமெய்தியவர்

மரணசாதன }
நியாயாதிக்கம் }
ரி. 3464.

இல. 74, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் இடத்தைச் சேர்ந்த நாகப்பர் சின்னையா குமாரசாமி. - மனுதார்.

(1) என். எஸ். நாகலிங்கராதவராசா, சின்னப்புத்துக் குளம், வவுனியா.
(2) நாகப்பர் சின்னையா மைத்திலிங்கம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
(3) முருகேசு சுப்பிரமணியம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு பங்குனி மாதம்28ந்திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னே தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.
1980 ஆண்டு மாசிமாசம் 8-ந் திகதி.
நீதிமன்ற ஆணைப்படி.

ஒப்பம்
பொ. பாக்கியநாதன,
பதிவாளர்
யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றம்

## தவறிவிட்டது

சென்ற வெள்ளிக்கிழமை காலை இரண்டு திறப்புகள் கொண்டகார்ச்சாவிக்கொத்து நல்லூர்க் கந்தசாமி கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 49, (161) பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் வை. கணேசலிங்கத்திடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 5303

## சட்டத்தரணி நியமனம்

இப்பட்டண சபையின் வழக்குகளில் தேவை ஏற்படும் போது தோன்றி வழக்கை நடாத்தவிரும்பும் சட்டத்தரணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் தமது விலாசம், தகைமை, அனுபவம் ஆகிய விபரங்களுடன் 05-04-1980-க்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

தெரிவாகி, சபையின் சட்டத்தரணியாக நியமிக்கப்படுபவருக்கு, தேவையான வழக்குகளில் தோன்றும்போது பிரயாணச்செலவுஉட்பட அவரது நியாயமான கட்டணங்கள் வழங்கப்படும்.

எஸ். சணேஷ்,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்.
கிளிநொச்சி.
1980-03-24. 5307

## பாவனையாளர் சங்கம் உதயம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பாவனையாளர் சங்கத்தின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதே தினத்தில் மாதகல், பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலகர்கள் பிரிவுகளிலும் பாவனையாளர் சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன. (கு)

சி. கனகரத்தினம்,
ஜே. பி யூ. எம்.,
உதவியாளர்:
கனகரத்தினம் கேசவன்,
சட்டத்தரணிகளும்,
பிரசித்த நொத்தாரிசும்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ-
பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கார்த்திகேசு அருணசலம் இராமலிங்கம், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
- மரணமெய்தியவர்.

கார்த்திகேசு அருணசலம் இராமலிங்கம் கைம்பெண் கமலாவதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
- மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல. ரி/3499

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு பங்குனிமாதம் 28-ஆந்நாளன்று முற்பகல் 9-00 மணிக்குஇந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்டபின்னுறுதிக்கட்டளைஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1980ம் ஆண்டு பங்குனிமாதம் 21ஆந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 5309

## வெற்றிடம்

### வள்ளச் சாரதி பதவி

ஐந்து வருடம் வள்ளம் செலுத்திய அனுபவச் சான்றிதழ் உடையவர்களிடம் இருந்து வள்ளச் சாரதி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும். 50 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும். கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், குணநலச் சான்றிதழ் இரண்டு, வள்ளச் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் ஆகியவை விண்ணப்பத்துடன் இணைக்கப்படல்வேண்டும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் சுற்று நிருபப்படி வேதனம் வழங்கப்படும். விண்ணப்பம் பொதுமுகாமையாளர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் 7-4-1980 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
5306 பூநகரி.

சி. கனகரத்தினம் ஜே. பி. யூ. எம்.,
உதவியாளர்:
கனகரத்தினம் கேசவன்,
சட்டத்தரணிகளும்,
பிரசித்த நொத்தாரிசும்.

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றம்

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை சின்னப்பு யோசேப் பெண் மேரியோசேப்பின் யோசேப், இராஜவீதி, அச்சுவேலி என்பவரின் மரணசாதன விடயத்தில் - மரணமெய்தியவர்

வழக்கு இலக்கம்.
மரணசாதன நியாயாதிக்கம்:
இல. ரி/3479
பஸ்தியாம்பிள்ளை சின்னப்பு யோசேப்,
484, ஆஸ்பத்திரி ரோட்டு,
யாழ்ப்பாணம்.
— மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ம் திகதிஅன்று அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
ஒப்பம்
பதிவாளர்.

1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 24-ந் திகதியன்று தேதியிடப்பட்டது.
5311

## கிளிநொச்சிப் பட்டணசபையின் மின்பாவனையாளருக்கு முக்கிய அறிவித்தல்

மின்சாரப் பற்றுக்குறை நாட்டில் ஏற்பட்டதைத் தொடர்ந்து மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு தங்களை வேண்டுமாறு மின்சார சபைத் தலைவரால் நான் அறிவிக்கப்பட்டுள்ளமைக்கு இணங்க கிளிநொச்சிப் பட்டணசபை எல்லைக்குள் சபையினால் மின்சாரம் பெறும் சகல பாவனையாளர்களையும் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைக் கடைப்பிடித்து எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

1. தங்கள் பாவனைக்குட்பட்ட உள்ளக, வெளியக, மின் குமிழ்களின் பாவனையை தேவையில்லாத நேரங்களில் நிறுத்துதல்.
2. மின்சார இயந்திரங்கள், உபகரணங்கள் முதலிய வற்றின் பாவனையை நாளாந்தம் பி. ப. 6 30 மணி தொடக்கம் பிற்பகல் 8-30 மணிவரை தவிர்த்தல்.
3. கைத்தொழில் சம்பந்தமாகப் பாவிக்கப்படும் மோட்டார்களின் பாவனையை கட்டுப்படுத்தல்.
4. மின் சார விசிறிகள் காற்று மிதப்படுத்தும் சாதனங்கள் போன்ற வற்றின் பாவனையை கட்டுப்படுத்தல்.
5. 31-1-1978-ந்திகதிக்குப் பின்னர் வீட்டுமின்பாவனையாளரால் பாவித்த 50 க்கு மேற்பட்ட மின் அலகுகள் ஒவ்வொன்றிற்கும் -/50 சதத்திற்கு குறையாமல் மின் கட்டணம் அதிகரிப்பதுடன், தொழில் ஸ்தாபனம் உட்பட மற்றைய எல்லாவிதமான மின்பாவனைக்கும் சாதாரணமாக பாவிக்கப்பட்ட நுகர்ச்சியிலும் பார்க்க 75 சதத்திற்கு மேற்பட்ட ஒவ்வொரு மின் அலகுகளுக்கும் ரூ. 1.42 சதத்திற்கு குறையாமல் அதிகரிக்கப்படும் என்பதையும் முன்கூட்டியே அறிவித்துக் கொள்கின்றேன், இவ்வதிகரிப்பு பிரதான மின்சாரப் பரிசோதகரின் அனுமதி கிடைத்ததும் அமுல் நடத்தப்படும்.

செ. கணேஷ்,
(ஒப்பம்)
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப்பட்டணம்,
கிளிநொச்சி,
1980-03-24. 5308

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தவறிவிட்டது

சென்ற வெள்ளிக்கிழமை இரவு யாழ் — பருத்தித்துறை பஸ்ஸில் திறப்புக்கள் அடங்கிய 'பாக்' தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் சு. கனகசபாபதியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 5315

வருக! வருக!

## மாபெரும் திறப்பு விழா "சண்முகா ஏஜென்சீஸ்"

63, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்று 26-3-1980 புதன்கிழமை காலை 9-24 மணியளவில் வரும் சுபவேளையில் மேற்படி ஸ்தாபனம் திறந்துவைக்கப்படும்.

சைக்கிள், துணைஉறுப்புகள், பான்சி பொருட்கள், சகலவிதமான வாகனங்களுக்குரிய ரயர்கள், எவரெடி பற்றறியும் - லைற் வகைகள் என்பனவும் இன்னும் சகலவித பாவனைப்பொருட்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

S. T. சண்முகநாதன்,
[illegible]
5301

## மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானம் வருடாந்த மஹோற்சவம்

சித்தார்த்தி வருஷம் பங்குனிமாதம் 15 ஆம்திகதி (28-3-80) வெள்ளிக்கிழமை பகல் 12-20 மணிக்கு கொடியேற்றம்.

பங்குனி 24 (6-4-80) இரவு மஞ்சம்.
பங்குனி 30 (12-4-80) இரவு சப்பரம்
ரௌத்திரி வருஷம் சித்திரை 1 (13-4-80) ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு ரதோற்சவம்
சித்திரை 2 (14-4-80) திங்கள் மாலை 4 மணிக்கு தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

மேற்படி தேவஸ்தான
தர்மகர்த்தாக்கள்
5313



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒருவனுடைய வீட்டையும் அடுப்பையும் பாதிக்கும்படிக்கு ஒரு யாத்திரையைமேற்கொள்வதில்லையென்று சொல்லப்படுகிறது. உண்மையென்னவென்றால், வீட்டையும் அடுப்பையும் முற்றாய்த் துறந்த பின்தான் ஒரு யாத்திரையை மேற்கொள்ளுவது சாத்தியமாகும்

---மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### கேரதீவு பஸ் சேவை

நாவற்குழி தனங்கிளப்புக் கிடையிலான பஸ் வண்டிகள் கடந்த சில மாதங்களாகப் பெரிதும் சீர்குலைந்த சேவையில் கடமையாற்றுவதால் குறிப்பிட்ட பகுதிக்கிடையில் உள்ள பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

பாதை இல. 809 கேரதீவு சேவையாற்றுகிறது. இந்த பஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பொழுதும்சரி, கேரதீவில் இருந்து புறப்படும் பொழுதும்சரி கூடுதலான பிரயாணிகளையும், வேறு சாமான்களையும் மீன்பிடிவலை, மீன்பிடி இயந்திரம், மீன் போடும் பிளாஸ்ரிக்கலங்களும் ஏற்றி நடைமுறைப்படுத்துவதால் இடையில் காத்துநிற்கும் பிரயாணிகளை ஏற்றாது செல்கிறது. அத்துடன் இந்தபஸ் யாழ்ப்பாணத்திலோ, கேரதீவிலோ உரிய நேரத்திற்குப் புறப்படுவதும் இல்லை அதிகமாக காலதாமதமாகவே சேவையாற்றுகிறது. நேரக் காப்பாளர்கள் கூட இதுபற்றி எந்தநடவடிக்கையும் எடுப்பது கிடையாது. மற்றப்பிரயாணிகளுக்கே பிரயாணம் செய்ய முடியாதநிலையில் இருக்கும் போது மேற்குறிப்பிட்ட சமான்களை ஏற்றுவதால் அதைக் கட்டுப்படுத்த திடீர் பரிசோதகர்கள்கூட இந்தப் பாதையில் கடமையாற்றியது கிடையாது. எத்தனையோ ஆண்டுகாலமாக இந்தப் பாதையில் இவ்வளவு கூடிய வருவாயும் பிரயாணிகளும் கூடியும் ஆனால் இரண்டு பஸ் மட்டுமே சேவையாற்றுகிறது. அத்துடன் நேரசூசிகைகூட பழைய நேரசூசிகையே. இதனால் காலை 10-00 மணிக்கு பின் பஸ்போக்குவரத்து, மாலை 3-50 வரை வீதிவெறிச்சோடிக் கிடக்கும் அளவுக்கு சேவை நடைபெறுகிறது. இதனால் பலதூரம் இடைநேரம் பஸ் இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இதைச் சற்று கவனித்து மக்களுக்கு நற்சேவைபுரிய உரியநடவடிக்கை எடுக்கவேண்டுகிறேன்.

பாதை இல. 805 பஸ்சேவை முன்பு முறைப்படி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கச்சாய்ஊடாக கொடிகாமம் வரை சேவையாற்றியது குறிப்பிடத்தக்கது. இந்தச் சேவையால் நாவற்குளி தொடக்கம் தனங்கிளப்புவரை உள்ள பிரயாணிகள் ஓர் அளவுக்கு நற்பயன் அடையக்கூடியதாகவும், 809 பாதை பஸ் இல்லாத நேரத்திலும் இடையே இது சேவையாற்றுவதால் பலன் பெற்றனர். தற்சமயம் அந்த பஸ்ஸைக்கூட அர்த்தமற்ற முறையில் எழுதுமட்டுவாள், கிளாலிபோன்ற இடங்களுக்கும் விஸ்தரித்து, அத்துடன் போதிய பஸ் கடமையாற்றும் பாதை இல. 769ல் கூட (சாவகச்சேரி - யாழ்ப்பாணம்) கடமையாற்றச் செய்துள்ளார்கள். இது சில அதிகாரிகளின் விஷமத்தனமானவேலை என்பதை தங்கள் கவனத்துக்குத் தருகிறேன். இதனால் பாதிக்கப்பட்டது நாங்கள்தான். எனவே இந்த 805 பாதை இலக்க பஸ்ஸை முன்புபோல் யாழ்ப்பாணத்தில் இருந்த காலை 6-30, காலை 10-00, பி. ப. 1-00, மாலை 3-00, மாலை 6-00, இரவு 8-30 ஆகிய நேரங்களுக்கு தளங்கிளப்பூடாக சேவையாற்ற நடவடிக்கை எடுப்பீர்களென தாழ்மையாக எதிர்பார்க்கின்றேன். இதனால் இப்பகுதிமக்கள் 809 கேரதீவு பஸ்ஸை எதிர்பார்க்கவோ பள்ளிப்பிள்ளைகள் காத்து நிற்கவோ, கஷ்டப்படவோ வேண்டிய அவசியம் ஏற்படாது. காலையில் தனங்கிளப்பில் இருந்து காலை 7-30 மணிக்கு பாடசாலைச் சேவை என விசேஷமாக கடமை செய்ய ஏற்படுத்திய பஸ் மாலையில் அப்பிள்ளைகள் திரும்பவீடு செல்ல எந்த ஒழுங்கும் கிடையாது. ஆனால் 805 பாதை இலக்க பஸ்ஸை செயல்படுத்துவதால், இப்பிரச்சனைதிரும்

இருந்தும் எமது பகுதி விசேஷமாக புறக்கணிக்கப்படுவது மிகவும் மனவருத்தம் தரும் செயலாகும். ஆகவே தயவுசெய்து நாவற்குளிச் சந்திக்கும்- தனங்கிளப்புச் சந்திம் இடையில் உள்ள மக்கள் படும் கஷ்டத்தை இந்த வழியில் தாங்கள் தீர்க்காவிட்டாலும் யாழ்ப்பாணதில் இருந்து தனங்கிளப்பூடாக சாவகச்சேரி வரை புதிய பஸ்ஸையாவது சேவையில் ஈடுபடுத்தி எமது கஷ்டத்தை தீர்க்கவும். இது பற்றி இப்பகுதிமக்கள் தங்களுடன் நேரில் முறையிடவும் தயார். உரிய காலத்தை எமக்கு அறிவித்தால், நாம் நேரில் சந்திக்கவும் உரிய ஒழுங்காயுள்ளோம் என அறியத்தருகின்றேன்.

க. நவரத்தினம்
கைதடி நாவற்குளி,
கைதடி.

ஃ ஃ ஃ

### இவ் வீதி திருந்துமா?

கரணவாய் தெற்கில் குஞ்சர் கடைஎன்னும் பிரதான சந்தியிலிருந்து கரணவாய் மகாவித்தியாலயம் வரை உள்ள வீதியில் பாடசாலைச் சேவைக்கென ஒதுக்கப்பட்ட இரு பஸ்கள் செல்கின்றன. சைக்கிள்கள் உட்பட மொத்தத்தில் எல்லா வாகனங்களும் செல்லும் இவ் வீதியை அபிவிருத்தி செய்யாமல் அபிவிருத்திச் சங்கங்களும், உள்ளுராட்சி மன்றங்களும் பின் வாங்குகின்றன.

இவ் வீதியில் வழமையாக நடைபெறும் சம்பவம் இது வீதி திருத்துவதற்காக கற்களைப் பறிப்பார்கள். ஆனால் வீதி திருத்தப்படமாட்டாது. பருவமழை காலத்தில் கற்கள் சீரழிந்து சிதறுண்டு போய் விடும்.

பயங்கர குண்டும் குழியுமான இவ்வீதியால் வாகனங்கள் செல்லத் தயங்குகின்றன.

இந் நிலைமை தொடர்ந்து நீடிக்க விடாமல் உரியவர்கள் கவனம் செலுத்துவார்களா?

சி. செல்வச்சந்திரன்
கரணவாய் தெற்கு
கரவெட்டி.

---

“அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

# திட்டமிட்ட முறையில் நியாய விலையில் வழங்க வேண்டும்

## உள்ளூர் உற்பத்திகளுக்கு உத்தரவாதவிலையும் தேவை”

### விலைவாசி உயர்வுக் கண்டனக் கூட்டத்தில் ‘அமிர்’

(மட்டக்களப்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஒரு திட்டமிட்ட முறையில் நியாயமான விலையில் வழங்குவதன்மூலம் விலைவாசி உயர்வை ஓரளவு தவிர்க்கமுடியுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆலோசனை தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற விலைவாசி உயர்வு கண்டனப் பொதுக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இளைஞர் பேரவையினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்தில்பல தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டு விலைவாசி உயர்வைக் கண்டித்தன. சிங்களத் தொழிற்சங்கங்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றுவதென்றிருந்தபோதிலும் பின்னர் அவை கலந்துகொள்ளவில்லை.

விலைவாசி உயர்வுக்கேற்ப சம்பள உயர்வு வழங்கவேண்டுமென்றும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க உத்தரவாத விலை வகுக்கவேண்டுமென்றும் அபிவிருத்தித் திட்டங்களை குறுகியகால, நடுத்தர நீண்டகால அடிப்படையில் வகுத்துச்செயற்பட வேண்டுமென்றும் திரு அமிர்தலிங்கம் தமது உரையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்று விலைவாசி உயர்வின் தாக்கத்தினால் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய் வீடுகளிலே காணப்படுகிறார்கள். எங்கு சென்றாலும் பசிபட்டினி. அரசாங்கம் அபிவிருத்தி அபிவிருத்தி எனச் சொல்கிறது. திட்டமற்ற பொருளாதாரக் கொள்கையினால் அவைகள் செயல்படுத்த முடியாத நிலைமை, மக்கள் திருப்தியுடன் வாழ்ந்தால்தான் அபிவிருத்திக்கு அவர்களால் ஆதரவு வழங்கமுடியும். மக்கள் ஆதரவு இல்லாமல் அபிவிருத்தி வெற்றிகாண முடியாது.

#### எரிபொருள் எப்படிவிரயமாகிறது?

இன்று விலைவாசி தாக்கத்திற்கு காரணம் எரிபொருள், இதன்பிரகாரம் அரசாங்கம் எரிபொருளை சிக்கனமாய் பாவிக்க வேண்டுமென்று கட்டளை இடுகிறது. நடைபெறுவது என்ன? ஒரு கல்நாட்டு விழாவிற்கு அமைச்சர் வருவதாயின் அவர் பின்னால் பல அரசாங்க வாகனங்கள் வருகின்றன. அதற்கு செலவிடப்படும் எரிபொருள்களினால் மக்கள் வயிற்றில் அடிவிழுகிறது. பிரித்தானிய பாராளுமன்றம் 300க்குமேலான உறுப்பினர்களைக் கொண்டது. அந்தப் பாராளுமன்றம் இன்றுவரை பழைய கட்டிடம்தான். ஆனால் நமது நாட்டில் பாராளுமன்றத்திற்கு புதிய கட்டிடம் அமைக்கிறார்கள். இதுதான் அபிவிருத்தி.

91 மந்திரிமார் நம நாட்டில். இத்தனைபேர் அவசியம்தானா? அவர்களினால் ஏற்படும் செலவுகள் மக்களை தாக்குகிறது. நாங்கள் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை இல்லை. அபிவிருத்தித் திட்டங்களை வரவேற்கிறோம். பிரதமரின் வீட்டுத் திட்டம் வரவேற்கத் தக்கது. இதே போன்று நல்ல திட்டங்களை வரவேற்போம்.”

#### யோகேஸ் உரை

யாழ்ப்பாண எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

“1977ம் ஆண்டு முதல்இன்று வரை இந்த அரசாங்கத்திடம் கட்டுப்பாடானபொருளாதாரத்தைக் காணமுடியவில்லை வர்த்தக மந்திரி திரு. அத்துலத்முதலி பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பிவிட்டோம் என்று சொல்லியுள்ளார். அவர் கட்டி எழுப்பிய பொருளாதாரம் இன்று தெரிகிறது. நிதிமந்திரி உலகம் சுற்றும் வாலிபன்போல் கடன் கேட்டு உலக நாடெங்கும் சுற்றித்திரிகிறார். அண்மையில் பல நாடுகளுக்கும் சென்றார். உதவி கிடைக்கவில்லை. ஈரான் நாடு மட்டும் சிறிய உதவி வழங்கியுள்ளது.

#### மட்டக்களப்பு அபிவிருத்தி காணவில்லை

நாட்டின் அபிவிருத்தி என்கிறார்கள். அபிவிருத்தி என்பது வாய்ச்சொல்லில் தான் தவிர செயலில் இல்லை. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பகுதிகளில் எவ்வித அபிவிருத்தியும் காணமுடியவில்லை. புயலால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டம் எவ்வித அபிவிருத்தியும் கண்டதில்லை. இதனைப் பாராளுமன்றத்தில் நான் சுட்டிக்காட்டியபோது இங்குள்ள மந்திரிமார் தவறு எனசுட்டிக்காட்டினார்கள்

#### காசி ஆனந்தன் பேச்சு

கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில் கூறியதாவது:-

“இந்நாட்டின் பயங்கர முதலாளிவர்க்கங்களை கொண்டது இந்த அரசாங்கம். வெறிபிடித்த சிங்கள பௌத்த ஏகாதிபத்திய வாதிகள் நிறைந்திருக்கிறார்கள் இன்றைய விலைவாசி உயர்வினால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளார்கள். உலகநாடுகளின் விலைவாசியை இங்கு சுட்டிக்காட்டுகிறார்கள் அதனால் இங்கும் விலை ஏற்றுகிறோம் என்கிறார்கள். ஆனால் அந்நாட்டு மக்கள் பெறும் வருமானத்தை கூறுகிறார்கள் இல்லை.”

ஜப்பான் நாட்டில் ஒவ்வொரு தொழிலாளியும் தனது சம்பளத்தில் செலவு போக 20 வீதம் மிச்சம் பிடிக்கின்றான் எனக் கூறிய கவிஞர் லண்டன் பிலிப்பைன்ஸ்ஆகிய நாடுகளின்சம்பளம், விலைவாசி போன்றவற்றை நமது நாட்டு சம்பளம், விலைவாசியுடன் ஒப்பிட்டு புள்ளிவிபரம் எடுத்தார்.

பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம், கற்குடாத் தொகுதிக் கூட்டணி அமைப்பாளர் திரு சி. சம்பந்தமூர்த்தி, மாவைசேனாதிராஜா, இரா. வாசுதேவா ஆகியோரும் பேசினர். மற்றும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. பூ. நடேசானந்தம், வரியிறுப்பாளர் சங்கம் திரு. கே. வி. கணபதிப்பிள்ளை, யோசப் மேரி அடிகளார், வண்டித் தொழிலாளர் சங்க மாஜி தலைவர் தி. ஏரோனிமோஸ், மனித உரிமை சங்கம் ஜி. எம். வி. வாஸ், அரசாங்க அஞ்சல் லிகிதர் சங்கம் திரு. க. துரைராஜா, நெசவாளர் சங்கம் ஜனாப் மொகதீன், திரு. எம். பாலசிங்கம், தமிழாசிரியர் சங்கம் திரு. கா. சின்னத்துரை ஆகியோரும் உரையாற்றினர்.

(அ)

---

### “தமிழினத்தின்

## சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்”

### இன்று ஆரம்பமாகும் கம்யூனிஸ்ட் மகாநாட்டிற்கு வரும் பிரேரணை

(கொழும்பு)

தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோடு அதன் அடிப்படையில் பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று கூறும் முக்கிய பிரேரணை ஒன்று இன்று ஆரம்பமாகும் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் 11-வது மகாநாட்டில் கொண்டுவரப் படவுள்ளது.

கொழும்பு நகரமண்டபத்தில் இன்று ஆரம்பமாகும் இம்மகாநாடு இம்மாதம் 30-ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இன்றைய மகாநாட்டில் [illegible] யின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க பிரதித் தலைவர் திரு பீட்டர் கெனமன் பொதுச்செயலாளர் திரு கே. பி. சில்வா வாலிப முன்னணித்தலைவர் திரு. சரத்முத்தட்டுவேகம உட்பட பலர் உரையாற்றுவர்.

இம்மாநாட்டில் சோவியத் யூனியன், கியூபா. வியட்நாம் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு உட்பட பல சோஷலிஷ நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

இன்றைய சூழ்நிலையில் பொது எதிரிக்கு எதிராக போராடுவதற்கு சகல இடதுசாரி சக்திகளும் ஒரே அணியின்கீழ் திரள வேண்டும் என்ற தீர்மானமும் மகாநாட்டில் கொண்டு வரப்படவிருக்கிறது.

(கு)

---

## ரூ.60 ஆயிரம் செலவில் புனரமைப்பு

(நெல்லியடி)

புத்தூர் கிராமச்சபை இவ்வாண்டு சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் வீதிகளை புனரமைக்கவுள்ளது.

இப் புனரமைப்பிற்கானநிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து கோப்பாய் எம்.பி.திரு.எஸ். கதிரவேற்பிள்ளையினால்சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியிலிருந்து அருளாவத்தை வீதி. அச்செழுவேதக் கோயில் வீதி, தம்பிமுத்து வீதி அண்ணாவி கந்தப்பிள்ளை வீதி, விஷ்ணு வித்தியாலய வீதி, என்பனவே புனரமைக்கப்படவுள்ளன.

(கு)

---

## காங்கேசனில் இலங்கை வங்கிக்கிளை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் இலங்கைவங்கிக் கிளை யென்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நவீன பாதுகாப்பு வசதிகளுடன் அமையவுள்ள இவ் இலங்கை வங்கிக்கிளை அடுத்த மாதம் இறுதிக்குள் திறந்து வைக்கப் படுமென இலங்கை வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக் கிளை காங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அதிபர் அலுவலகத்திற்கு அண்மையில் உள்ள கட்டிடத்தில் அமைக்கப்படவுள்ளது.

(க)

புலோலி நிரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "கொலைகாரனின் மனமும் ஆண்டவனுடன் ஒன்றிவிட்டால் அவனருள் கிடைக்கும்"

## மாவிட்டபுரத்தில் தமிழகப் பேராசிரியர் செல்லமுத்து

(மாவிட்டபுரம்)

"ஆண்டவனின் அருள் பெற சமயக்கருத்துக்களை கற்றுத்தேற வேதாகமங்களை பின்பற்றி நடக்கவோ வேண்டியதில்லை இவற்றினால் பக்தி வளர்வதற்குப் பதிலாகப் பகுத்தறிவுக் கருத்துக்களே வளர்கின்றன. கொலைகாரனாக இருந்தாலும் கொள்ளைக்காரனாக இருந்தாலும் ஆண்டவனுடன் அவனது மனம் ஒன்றிவிட்டால் அவனுக்கு ஆண்டவனதுஅருள் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை"

இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள புதுக்கோட்டைக் கல்லூரி பேராசிரியரான புலவர் கரு செல்லமுத்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடத்திய சொற்பொழிவு நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் கூறினார்.

மாவை ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ து சண்முகநாதக்குருக்கள் சொற்பொழிவைத் தொடக்கி வைக்க பண்டிதர் இ. நமசிவாயம் தலைமை வகித்தார். புலவர் செல்லமுத்து மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அண்மைக்காலத்தில் தமிழகத்தில் சமயம் இலக்கியம் ஆகிய துறைகளில் ஒரு வீழ்ச்சி நிலை தென்பட்டது. அதனையடுத்தே நாம் இத்துறைகளில் பிரசாரம் செய்யும் முயற்சியை ஆரம்பித்தோம் எமது சமய இலக்கியப் பிரசாரம் இளைஞர்களிடையே தான் அதிகமாக மேற்கொள்ளப்பட்டது. இதன்பயனாக தமிழகத்தில் இன்று இளைஞர்களிடையே சமயப் பற்று இலக்கியப்பற்று என்பனவற்றை நாம் ஓரளவு வளர்த்துள்ளோம் இங்கும் இளைஞர்களிடையே இப்பற்றுகள் வளர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

"சைவமும் தமிழும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை சைவம் தான் தமிழ் தமிழ்தான் சைவம் என்பதே எமது கருத்து தொன்மை வாய்ந்த சைவமும் தமிழும் ஒன்றாகவே வளர்ந்தும் வந்திருக்கின்றன. தமிழ் இல்லாமல் சைவம் வளரமுடியாது. சைவம் இல்லாமல் தமிழ்வளரமுடியாது. ஆகவே தான் நாம் தமிழைச் சொல்லிசைவத்தை வளர்த்து வருகிறோம்.

"கோவிலுக்கு வழிபாடியற்றப் போகிறோம் ஆனால் அங்கு ஆண்டவனுடன் ஒன்றி நிற்பது கிடையாது. சிலகவலைகளை அங்கு கொண்டுசெல்கின்றோம் திரும்பிவரும் போதும் சிலகவலைகளைக் கொண்டு வருகிறோம். கவலைகளை நீக்குவதற்கு ஆண்டவனது அருளைப்பெறுவதற்கு அறிவு ஞானம் தேவையில்லை.

புலவர் கே அரங்க நெடுமாறன் பேசுகையில் கூறியதாவது

"இந்த நாட்டிலே பல சமயத் தொண்டர்கள் வாழ்ந்து வகிதுள்ளார்கள் நாவலர் சி வை. தாமோதரம்பிள்ளை உ வே சாமிநாதையர்போன்றவர்கள் தமிழகம் வந்தும் சேவையாற்றியுள்ளனர் அவர்கள் வாழ்ந்த பூமியில் பேசுவதற்கு நாம் அருகதையற்றவர்கள்.

இங்கிருந்து அறிவாளிகள் அங்கு சென்றும் அங்கிருந்து இங்கு வந்தும் ஒரு தொடர்பு ஏற்படவேண்டும். நாம் மலேசியா சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்ற போதும் எமது சகோதரர்கள் வாழுகின்ற யாழ்ப்பாணத்திற்கு இன்று தான் வர முடிந்தது எம்மிடையே தமிழைப்பேசுபவர்கள் சைவத்தைப் பேணுவர்கள் என்ற முறையில் ஓர் அன்புப் பிணைப்பு என்றும் இருந்தே தீரும்' என்றார். (கு)

# "நமது கைத்தறித்துணிகளுக்கு விரைவில் மவுசு வரும்"

## -- யாழ். சிறுகைத்தொழில் அதிபர்

(பண்டத்தரிப்பு)

"எமது நாட்டிலுள்ள கைத்தறி நெசவு நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பெட்சீற், துவாய்கள் ஆகியன வெளிநாட்டு இறக்குமதிகளிலும் பார்க்க நல்ல தரமானவைகளாகவும் நீண்ட கால பாவனைக்கு உகந்ததாகவும் இருப்பதாகப் பலராலும் பாராட்டப்படுகின்றன. வெளிநாட்டு இறக்குமதித்துணிகளின் விலைகள் மேலும் அதிகரித்து வருவதினால் எமது மக்களின் நாட்டம் தற்போது கைத்தறி நெசவு ஆடைகளின் பக்கம் விரைவில் திரும்பும் என்றும் எதிர்பார்க்கலாம் ஆகவே நெசவுத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் விரக்தியடையாது தமது தொழிலில் அதிகளவு கவனம் செலுத்தி வரவேண்டியது அவசியமாகும்".

இவ்வாறு பொன்னாலை-நெல்லியான் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய நெசவு நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். சிறுகைத்தொழில் திணைக்கள உதவி அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் குறிப்பிட்டார். திரு. வே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. விசுவலிங்கம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் "எமது எதிர்கால சந்ததியின் நலன் கருதி எமது பகுதிகளிலுள்ள நெசவு நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளை மக்கள் வாங்கி உபயோகிக்க முன்வர வேண்டும் இதனால் எமது பகுதியிலுள்ள பெண்பிள்ளைகளுக்கு அதிக வேலைவாய்ப்புகளையும் வருமானத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும் என்பதை நாமனைவரும் உணரவேண்டும்"

வலிமேற்குப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ச. இராசரத்தினம் உரையாற்றுகையில், இந் நிலையத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவித்தார். திரு. வே. கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஆகியோர் உட்படப்பலர் உரையாற்றினார்கள்.

# "அடித்தளத்திலுள்ளவர்களை ஊக்குவிக்க பிரதமரின் வீடமைப்புத் திட்டம் உதவும்"

## உடுப்பிட்டி எம். பி. நம்பிக்கை

(நெல்லியடி)

"பிரதமரின் வீடமைப்புத் திட்டங்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களின் கல்வி, சமூக, பண்பாட்டு, பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கின்றன. வளர்ந்து வரும் வீடில்லாப் பிரச்னையைக் குறைப்பதற்கு இம்மாதிரியான கிராம வீடமைப்புத் திட்டங்கள் பேருதவி புரியும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கன்பொல்லை நவீன கிராமத்தில் பாடசாலை மாணவர்கள், சர்வோதயத் தொண்டர்கள் ஆகியோரின் சிரமதானப் பணிகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். தம்பிமுத்து தலைமையில் நடைபெற்ற சிரமதானப் பணியில் அவர் மேலும் பேசுகையில், "மாணவர்கள் இச்சிரமதானப் பணியில் கலந்துகொள்வதன்மூலம் சிறந்த பண்புகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள். கூட்டுப் பொறுப்பு, கடமையுணர்ச்சி என்பனவற்றை மாணவர்களின் உள்ளங்களில் சிரமதானப்பணிகள் வளர்த்தெடுக்கும்" என்றார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர்கள், அதிபர் கே. குணரட்ணம், ஆசிரியர் வீ. நடேசு, கரவெட்டி திரு. இருதயக்கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள், கரவெட்டி மேற்கு கிராமசேவகர் திரு. எ. இரத்தினசிங்கம் ஆகியோர் இச்சிரமதானப்பணியில் கலந்துகொண்டனர். (கு)

# "சகமாணவன் வெற்றிகண்டு பூரிக்கும் பண்பு வேண்டும்"

(புங்குடுதீவு)

"விளையாட்டுப் போட்டிகளின்போது கவனிக்கவேண்டியது வெற்றி தோல்வியல்ல; மாணவர்கள் உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் போராடினார்களா என்பதே முக்கியமானதாகும். இன்று தோற்பவர்கள் இன்னொரு நாளில் வெற்றியின் மேல் வெற்றியைக் குவிக்கும் தீரர்களாக விளங்குவர். வெற்றியைக்கண்டு வெறி கொள்வதோ தோல்வியைக் கண்டு துவளுவதோ சரியல்ல. நாம் தோற்றாலும்நம்சகோதர மாணவன் பெறும் வெற்றி கண்டு பூரிக்கும் மனோபாவமே சிறந்தது".

புங்குடுதீவு உபகல்விவட்டார ஆசிரியர் சங்கம் நடத்திய மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி உரையாற்றுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. குகதாசன் தலைமையில் இப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் இறுப்பிட்டி சித்திவிநாயகர் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் ஸ்ரீகணேசா மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

சங்கத்தலைவர் திரு. த. சிவகுருவர வேற்புரை நிகழ்த்த செயலாளர் திரு. ந. தர்மபாலன் நன்றிதெரிவித்துப் பேசினார். இப்போட்டியில் புங்குடுதீவிலுள்ள சகல பாடசாலைகளும் பங்குபற்றின. (அ)

# ஓட்டப்போட்டியில் யாழ். பொலிஸ் கோஷ்டி சாம்பியன்

[யாழ்ப்பாணம்]

இலங்கை பொலிஸ் படையினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் கோஷ்டியினர் ஓட்டப்போட்டியில் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டி பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் இலங்கையிலுள்ள 24 மாவட்டங்களைச் சேர்ந்த பொலிசாரும் பங்கு பற்றினர்.

தரைப்படைத் தளபதி திரு. ரதுன்னிஸ் பெரேராவும் அவரது பாரியாரும் இவ்வைபவத்தின் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 14பொலிசார் ஜனாப். ஜோ. மிஸ்கின் தலைமையில் கொழும்பு சென்றனர். இவர்களுடன் வடபிராந்திய உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பி. மகேந்திரன், யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப். என். எம். எஸ். நிசாம் ஆகியோரும் சென்றனர்.

பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில்நடைபெற்றஇப் போட்டியின் ஓட்டப்போட்டிகளில் சாம்பியனாக யாழ்.மாவட்ட பொலிஸ் கோஷ்டி தெரிவு செய்யப்பட்டது. (கொ)

# கைப்பணிப் பொருட்காட்சி

(புலோலி)

பருத்தித்துறை, புலோலி கிழக்கு ஞானசம்பந்த கலைமன்றத்தின் பொருட்காட்சி நாளை ஆரம்பமாகி இம்மாதம் 29 திகதி வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் இப்பொருட்காட்சியில் நவீனமுறையில் தைக்கப்பட்ட உடைகள், உள்ளூர் உற்பத்தி நெசவுத் துணிகள், கைப்பணிப் பொருட்கள் ஆகியன காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளன. (கு)

# மன்னார்ச் செய்திகள்

### பாடசாலை பஸ் சேவையில்லை

(மன்னார்)

பேசாலை, சிறுத்தோப்பு, கரிசல், ஓலைத்தொடுவாய், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலிருந்து எருக்கலம்பிட்டி, மன்னார் போன்ற இடங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலை பஸ் சேவையில்லாததால் குறிப்பிட்ட நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்ல முடியாது மிகவும் அவதியுறுகிறார்கள். (கு)

### 40 வீடுகள் அமையும்

சுய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள தோட்டவெளிப் பகுதியில் 40 வீடுகள் நிறுவப்படவுள்ளன. தற்போது இப்பகுதியில் நிறுவப்படும் வீடுகளில் வசிக்க விரும்புபவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுவருகின்றன. (கு)

### சீட்டு விளையாட தடை

மன்னார் மாவட்டத்திலுள்ள பண்டாரவெளி என்னும் முஸ் [...] யாடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

பண்டாரவெளி மசூதி பரிபாலன சபையால் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானம் தொடர்ந்து அமுல் நடத்தப்பட்டுவருகிறது.

### புதிய பள்ளிவாசல்

அண்மையில் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச். முகமது பேசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பள்ளிவாசலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

### திருப்பாடு காட்சி

பேசாலை வெற்றிமாதா ஆலயத்தில் இன்றிலிருந்து தொடர்ந்து மூன்று தினங்கள் திருப்பாடு காட்சிகள் காண்பிக்கப்படும். திருப்பாடு காட்சிகளைக் காண வெளியிடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருப்பாடு காட்சியை முன்னிட்டு பேச்சுவரத்து சுகாதார, தண்ணீர், பாதுகாப்பு வசதிகளும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (கு)

# அரச அதிபருக்குக் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் பரிபாலனத்திற்கு உட்பட்ட அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் சகல தரங்களைச் சேர்ந்தஅலுவலக ஊழியர்களுக்கும் மேசைகள், கதிரைகள் வழங்குவதற்கும், சிலருக்கு வழங்கப்பட்ட உடைந்த கதிரைகளுக்கு பதிலாக நல்ல தளபாடங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பொதுசேவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி கிளைச் செயலாளர் திரு.சி. ஆறுமுகம் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.எஸ்.தர்மபாலனை சந்தித்து பேச்சுவார்த்தைநடாத்தியதை அடுத்து சகல அரசாங்க திணைக்கள அலுவலகங்களிலும் அலுவலக ஊழியர்களுக்கு நல்ல நிலையிலுள்ள மேசை கதிரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (கு)

# பருத்தித்துறையில் திருப்பாடுகள் காட்சி

(உடுப்பிட்டி)

பருத்தித்துறைப் பங்குச் சந்தோலிக்க இளைஞர் அளிக்கும் 'முப்பது காசு' என்னும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இம்மாதம் 29 ம் திகதி இரவு பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க கனிஷ்ட உயர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (அ)

# கருத்தரங்கு

(உடுப்பிட்டி)

பருத்தித்துறைகல்விவட்டம் பல ஸ்தாபனங்களுடன் சேர்ந்து 'வடமராட்சியின் அபிவிருத்திக்கு' என்ற தலைப்பில் நடாத்தும் கருத்தரங்கு இம்மாதம் 31ம் திகதி ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் திரு.என். பாலகிருஷ்ணன் கருத்துரை வழங்குவார். (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பஹ்லவியிலிருந்து ஷா வெளியேறியதால்

# "புதியதொரு சர்வதேச நிலைமைநிச்சயம் உருவாகும்"

## ஐ. நா. கமிஷன் ஜயவர்த்தன கருத்து

(கொழும்பு)

ஈரானிய ஷா பஹ்லாவி லிருந்து வெளியேறி எகிப்தில் அடைக்கலம் புகுந்தமை புதிய தொரு சர்வதேச நிலையை உருவாக்கும் என்று ஐ. நா. விசாரணைக் கமிஷன் உறுப்பி னரான திரு எச். டபிள்யூ. ஜயவர்த்தன கூறினார்.

நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய திரு. ஜயவர்த்தன ஷா பஹ்லாவைவிட்டு வெளி யேறியது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

"ஈரானில் ஷா ஆட்சியிலிருந்தபோது ஏற்பட்டதாகக் கூறப்படும் அசம்பாவித செயல்கள்பற்றிய நமது கமிஷன் விசாரணை முடியவில்லை, மீண்டும் எமது பணியை தொடருவோம்.

"இதுவரை நாம் நடத்திய விசாரணைகள் தொடர்பான இடைக்கால அறிக்கை எதையும் ஐ. நா. சபையிடம் நாங்கள் கையளிக்கவில்லை,

"ஷா புரிந்ததாகக் கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பாக மட்டுமன்றி ஈரானில் பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க அதிகாரிகளை விடுதலை செய்வது தொடர்பாகவும் நாம் ஆராய்ந்தோம். எமது விசாரணைக்கு சகல மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள்" (கு)

---

### தலைமைப்பதவிக்கு யு. என். பி. பிரமுகரும் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத் தலைமைப் பதவிக்கு பலத்த போட்டி நிலவுவதாகத்தெரிகிறது.

தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச்சங்கத்தலைவர் முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா அண்மையில் காலமானதைத் தொடர்ந்து தலைவர் பதவி காலியாகஉள்ளது தெரிந்ததே.

மேற்படி பதவிக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்களும், ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவர்களும், மாவட்டஅமைச்சருக்கு சிபார்சு செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது

ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவரும், சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கப்பொதுச்செயலாளருமான திரு. வ. விபுலானந்தனின் பெயரும், மேற்படி தலைமைப்பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச

---

செல்வா

### வாழ்க்கைப் பணிக்கு நன்றி வழிபாடு

(பண்டத்தரிப்பு)

அமரர் தந்தை செல்வநாயகத்தின் 83-வது பிறந்ததினமான இம்மாதம் 31ம் திகதி திங்கட்கிழமையன்று அன்னாரின் வாழ்க்கைப் பணிகளுக்கு நன்றிகூறும் சமயவழிபாடு தெல்லிப்பழையிலுள்ள தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வழிபாட்டை வண. பிதா அம்பலவாணர் அடிகளார் நடாத்துவார். (அ)

---

எல சல்வடோர்

# மேற்றிராணியார் சுட்டுக் கொலை!

எல்சல்வடோர், மார்ச், 25 எல்சல்வடோரில்கத்தோலிக்க மேற்றிராணியார் ஒருவர்இனந் தெரியாத இருநபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக் காலங்களில் எல்சல்வடோரில் இடம்பெற்று வந்த கலவரங்களுக்குக் காரணமாகஇருந்த தீவிரவாத இயக்கங்களை கண்டித்துவந்த மேற்றிராணியார் ஒஸ்கார் ரொமேய்ரோவே சுட்டுக் கொலை செய்யப்பட்டவராவார்.

இங்குள்ள வைத்தியசாலைத் தேவாலயம் ஒன்றில் பூசை நடத்திக் கொண்டிருந்தபோது உள்ளே நுழைந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கியால் பலமுறை சுட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும், பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்றிராணியார் அங்குமரணமானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

---

### மீனவர் கிராமம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத்தொகுதியில் மீனவர் கிராமமாக நாவலடி கிராமம் தெரிவு செய்யப்பட்டு மீனவர் வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான சிபார்சை தான் மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவிற்கு செய்துள்ளதாக அண்மையில் இக்கிராமத்திற்கு விஜயம் செய்த மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரை தெரிவித்தார். (கு)

......

### ஐவர்தெரிவு

(சாவகச்சேரி)

மிருசுவில் தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் அச்சுவேலி கிராமாபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு 5 பேர் தெரிவாகியுள்ளனர். செல்வி சகாயராணி செல்வரத்தினம், செல்வி நிர்மலா இராசக்கோன், மேரி பிலோமினா கேசரசோதி, அகில சாந்தினி வல்லிபுரம், செல்வி மரியகொறற்றி அந்தோனிப்பிள்ளை ஆகியோரே தெரிவு செய்யப்பட்டஐவருமார். (அ)

---

### இலவச சிகிச்சை

(மட்டக்களப்பு)

கல்முனை வை எம் சி. ஏ இயக்கத்தினர் வைத்தியசாலை வைத்தியர் ஆதரவுடன் கிராமங்களுக்குச் சென்று இலவச வைத்தியத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இதன் பிரகாரம் அண்மையில் பட்டிருப்புத் தொகுதி மண்டூர் கிராமத்தில் 200 நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை செய்தனர். அதனைத் தொடர்ந்து நோய்தடுப்பு பற்றி இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் ஒரு கருத்தரங்கும் நடத்தினர். [கு]

---

### மட்டுநகரில் தமிழ்க்காங்கிரஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத்தொகுதியில் தமிழ்காங்கிரஸ் கிளை ஒன்று நிறுவுவதற்கான ஏற்பாடுகளை சில கட்சி ஆதரவாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இளைஞர்கள் சிலர் இவ் விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் சென்று தலைமைச்செயலகத்துடன்தொடர்புகொள்ள இருப்பதாகவும் அறியப்படுகிறது. (ரு)

---

# தோட்டவெளி புகையிரத நிலையம் தரமுயரும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள தோட்டவெளி புகையிரத நிலையத்தில் பிரயாணிகள் தங்கிப் பிரயாணம் செய்ய தங்குமிடவசதிகள், வெயில், மழை காலங்களில் பிரயாணிகள் தங்கும் விதத்தில் புகையிரத நிலையக் கூரை என்பன இல்லை.

இப்பகுதியில் 15 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர் இங்குள்ள மீனவர்கள் தமது மீன், கருவாடு போன்றவற்றை பேசாலை, மன்னார் ஆகிய புகையிரத நிலையங்களிலிருந்தே வெளியூர்களுக்கு அனுப்பிவருகிறார்கள். ஆதலால் மேலதிக தண்டவாளம் ஒன்றை அமைத்து, இப்புகையிரத நிலையத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறு அண்மையில் தோட்டவெளி புகையிரத நிலையத்திற்கு போக்குவரத்து அதிகாரிகளுடன் விஜயம் செய்த போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமதுவிடம் தோட்டவெளிப் புகையிரத நிலைய அதிபர் எடுத்துக் கூறினார்.

தோட்டவெளி புகையிரத நிலையத்தை விரைவில் தரமுயர்த்தி சகல வசதிகளும் செய்துதரப்படுமென போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது கூறினார்.

---

### பளை மக்கள் வங்கி திறக்கப்படும்

(பளை)

மூடப்பட்டிருக்கும் பளை மக்கள் வங்கிக் கிளை அடுத்த மாதம் நடுப்பகுதியில் மீண்டும் திறக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மக்கள் வங்கி துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. ... பலோலி ...

---

# நாளை யோகசுவாமிகளின் குருபூசையும் பாதயாத்திரையும்

(யாழ்ப்பாணம்)

யோகசுவாமிகள் குருபூசை நாளை வியாழக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. அன்று காலை 4 மணிக்குத் தொடங்கி சிவதொண்டன் நிலையத்தில் திருவடிபூசை, அபிஷேகம், ஆராதனை நடைபெற்றபின், அடியார்கள் அன்பர்களின் பாதயாத்திரை ஆரம்பமாகி மங்களகீத வாத்தியங்களோடு குருபூசை நடைபெறும் தலமாகிய கொழும்புத்துறை ஆச்சிரமத்தை சென்றடையும்.

**யாத்திரை மார்க்கம்**

அடியார்கள் வியாழன் காலை 6 மணிக்குக் காங்கேசன் துறை வீதி, அரசடி வீதி வழியாக நல்லூர்க்கந்தசுவாமி கோவிலையடைந்து, கோவில் தேரடியில் 15 நிமிஷம் தங்கி வழிபாடாற்றியபின் பருத்தித்துறை வீதி, கச்சேரி நல்லூர் வீதி, மாம்பழச்சந்தி, இலந்தைக்குளம் வீதி வழியாகச் சென்று, கொழும்புத்துறை ஆச்சிரமத்தைச் சென்றடைவர்.

அன்று காலை 10 மணி தொடங்கி ஆச்சிரமத்தில் அபிஷேகம் ஆராதனை நடைபெற்றபின் மாகேசுரபூசை நடைபெறும்.

பாதயாத்திரையின் போது அந்தந்த வீதிகளிலுள்ளவர்கள் தத்தம் இல்லங்களின் முன்றல்களில் மகரதோரணம் முதலிய அலங்காரங்களைச்செய்து பூரண கும்பங்களை அமைத்து வழிபடுவர். (ஈ)

---

# "வண. பிதா லோங் வழியில் மதுரநாயகம் அடிகள் பணி"

## பாராட்டுவிழாவில் கிளிநொச்சி எம்.பி.

(உடுப்பிட்டி)

மதகுருமார் மக்களின் ஆன்மீக வாழ்விலும் கல்வி வளர்ச்சியிலும் காட்டி வரும் கவனமும் நடவடிக்கைகளும் இந்நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பங்குவகிப்பதைக் காட்டுகின்றன. வண பிதா மதுரநாயகம் கல்வித்துறைக்கு ஆற்றிவரும் பணி மகத்தானது. பிரபல கல்லூரிகளின் அதிபராகவிருந்தும் கத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளராகவும்இருந்து அவர் ஆற்றிய சேவையை எவரும் மறுக்க முடியாது. அவரின் சேவை, கல்வி அபிவிருத்திக்கு இன்றியமையாதது. இதனாலேயே அரசாங்கமும் அவரது ஆலோசனையை நாடுகின்றது. வண. பிதா லோங் அடிகளார் ஆற்றிய பணியின் வழியில் அவர் லோங் ஸ்தாபனத்தை நடாத்திவருவது பாராட்டுக்குரியது.

இவ்வாறு கிளிநொச்சிஎம். பி திரு. வி. ஆனந்தசங்கரி யாழ். பிரதேசக் கல்வி அபிவிருத்தி ஆலோசனைச்சபை உறுப்பினராகக் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ள அதி. வண பிதா மதுரநாயகம் அடிகளாருக்கு கிளிநொச்சி சென் திரு. திரேசம்மாள் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

'நவஜீவன' அதிபர் வண எஸ். தம்பிராஜா விழாவிற்குவிற்குத் தலைமை வகித்தார். திரு. க. பாக்கிய நேசர் வண பிதா எட்மன் மைக்கேல் உட்பட வேறு பலரும் பேசினர். (அ)

---

உடுவிலில்

### திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

மல்வம் உடுவில் ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்தின் ஆதரவில் மல்வம் பங்குமக்கள நடத்தும் திருப்பாடுகளின் காட்சி இம்மாதம் 30ம் திகதி உடுவில் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெறவுள்ளது இதனைபொட்டி விசேட பஸ் சேவைகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. (கு)

......

### திருப்பாடுகள் நாடகம்

(நெல்லியடி)

பருத்தித்துறை கத்தோலிக்க வாலிபர் கழகம் 150 அடி அகல மேடையொன்றில் 'முப்பது காசு' என்னும் யேசு பெருமானின் திருப்பாடல்களின் காட்சிகளை நாடகமாகத் தயாரித்தளிக்கவுள்ளது.

இந்த 150 அடி அகல மேடை அமைப்பு வேலைகள், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ரெஜி ராஜேஸ்வரன்மேற்பார்வையில் நடைபெற்றுவருகின்றன. [அ]

......

### தெரிவு

[கிளிநொச்சி]

இலங்கை தேசிய ஊழியர் சங்கத்தின், கிளிநொச்சி டிப்போ கிளைத் தலைவராக திரு. எஸ். சிங்கராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பல ஆண்டு காலமாக ஊழியர்களின் நன்மைக்காக உழைத்துவரும் இவர், கிளிநொச்சிப் பகுதியில் சமூக சேவைகளிலும் ஈடுபட்டுவருபவராவார். (நெல்-அ)

---

### உற்சவம்

(சரவணை)

புங்குடுதீவு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் என அழைக்கப்படும் சிவன்கோவில் ஆலய வருடாந்த உற்சவம் சென்ற வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இம்மாதம் 29 ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (அ)

......

### கமநல சேவை நிலையம்

(மட்டக்களப்பு)

பொத்துவில் தொகுதில் கொக்குநாரை என்னுமிடத்தில் புதிய கமநலசேவை நிலையம் ஒன்று அடுத்தமாதம்நடுப்பகுதியில் பொத்துவில் எம். பி. டாக்டர் ஜலால்தீனால் திறந்துவைக்கப்படவுள்ளது. (கு)

......

### எழுத்தாளர் ஒன்றிய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இளம் எழுத்தாளர் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் யோகநாதன் இன்ஸ்ரியூற் ஸ்தாபன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தலைவர் திரு. கணபதி கணேசன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் காவலூர் எஸ் ஜெகநாதன் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். சகல இளம் எழுத்தாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனமாவிலி ருந்து வெளியேறவேண்டாம்

# அமெரிக்க கோரிக்கையை ஷா செவிசாய்க்கவில்லை!

## அமெரிக்க அதிகாரிகள் கவலை

வொஷிங்டன் மார்ச் 5

பனமாவிலிருந்து வெளியேற வேண்டாமென்று அமெரிக்கா கேட்டபொழுதிலும் ஈரானிய ஷா அமெரிக்காவின் அக்கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெஹ்ரானிலுள்ள அமெரிக்க பணயக் கைதிகள் விவகாரம் அவர் பனமாவை விட்டு வெளியேறினல் மேலும் மோசமடையலாம் என்பதாலேயே அமெரிக்கா ஷாவை வெளியேறவேண்டாமென்று கேட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஷாவை திருப்பியனுப்புமாறு ஈரான் கோரியபோது, மரணதண்டனை அமுலிலுள்ள நாடொன்றுக்கு அனுப்பமா அரசியல் ... டத்திற்கே இடமில்லை என்று திட்டவட்டமாக பனமா அரசு அறிவித்த பின்னரும் ... ஏன் எதிப்புக்குப் போனுர் என்று தெரியவில்லை என்றும் அந்த அதிகாரிகள் கூறினர். (கு)

## எங்கு ... கலமாகுலும் திருப்பி அனுப்பக்கோருவோம்'

### ஈரானிய ஜனதிபதி விளக்கம்

தெஹ்ரான் மார்ச் 25

"முன்னுள ஈரானிய மன்னர்ஷா எந்தநாட்டில் அடைக்கலம் புகுந்தாலும் ஈரானுக்கு திருப்பியனுப்புமாறு ... கோரிக்கைவிடுக்கத் தவறுவு"

இவ்வாறு ஈரானிய ஜனதிபதி ஜனப் பாணி சதார் கூறியுள்ளார்.

ஷா பனமாவிலிருந்து வெளியேறியது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனப் சதார் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

ஈரானிய ஷாவுக்கு எகிப்து புகலிடம் அளித்ததன்மூலம், பனமா மட்டுமன்றி எகிப்தும் அமெரிக்காவின் ஆதிக்கத்திலேயே இருக்கின்றது என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது என்றும் அவர் கூறினர். (கு)

## ஷாவுக்கு சத்திரசிகிச்சை

கெய்ரோ மார்ச்,25

ஈரானிய ஷாவுக்கு மண்ணீரலை அகற்றுவதற்கான சத்திரசிச்சை ஒரு வாரத்தில் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பனமாவில் தங்கியிருந்தபோது எதுவித காரணமுமின்றி ஒத்திவைக்கப்பட்ட இச் சத்திரசிகிச்சை தற்போது கெய்ரோ இராணுவ வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (கு)

## அரசியல் கைதிகள் மன்னிக்கப்படுவர்

டாக்கா, மார்ச் 25

பங்களாதேஷ் சுதந்திர தினத்தை முன்னிட்டு சகல அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

தற்போது சிறையில் இருந்து வரும் பல முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளனர். (கு)

## "உலக அதிகாரத்தையே சோவியத் விரும்புகிறது" — சீனப்பிரதமர்

பீகிங் மார்ச் 25

"சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்துக் கொண்டதிலிருந்து, உலக ஆதிக்கத்தையே அதுவிரும்புகின்றது என்பதை வெளிப்படுத்திவிட்டது,"

இவ்வாறு சீனப்பிரதமர் திரு. குவாகுவா பெங் நேற்று பீக்கிங்கில் நடைபெற்றபொது வைபவமொன்றில் பேசுகையில் கூறினுர்.

சோவியத் யூனியனின் உலக ஆதிக்கத்திட்டத்தை முறியடிக்க மற்றைய நாடுகள் உதவுமாஞல் நிச்சயமாக முறியடித்துவிடலாம் என்றும் திரு. பெங் கூறினுர். (கு)

## வடக்கில் அதிக சேமிப்பு

(புலோலி)

பருத்தித்துறைச் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் கடந்த ஐந்து மாத காலத்திற்குள் 10 மில்லியன் ரூபாய்கள் சேமிப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாக தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளர் திரு. பாக்கியநாதன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் இக் கிளையில்தான் குறுகிய காலத்தில் கூடிய பணத்தொகை சேமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பிரிவுபசாரமளிப்பர்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்பணியாற்றி பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளைக்கு பிரிவுபசாரவிழா ஒன்றை நடாத்த உடுப்பிட்டித் தொகுதி மக்கள் தீர்மானித்துள்ளார்கள்.

இப்பிரிவுபசாரவிழா அடுத்த மாதம் 2ம்திகதி கரவெட்டியில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக தேர்தலுக்கு ஜனதா தனியான தேர்தல்அறிக்கை

## 60 இடங்களில் போட்டியிடும் என்கிருர் லட்சுமணன்

சென்னை மார்ச், 25

நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலுக்காக ஜனதாக்கட்சியின் தமிழ்நாடு பிரிவு தனியான தேர்தல்அறிக்கையையே வெளியிடுமென்று ஜனதா தமிழ்நாடு பிரிவுத் தலைவர் திரு.எஸ். எல். லட்சுமணன் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிருபர்கள் கூட்டமொன்றில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

அ.தி.மு.க. வுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜனதாக்கட்சி கூட்டாகவே தேர்தல் அறிக்கையையும் வெளியிடுமா என்று கேட்கப்பட்ட போதே திரு. லட்சுமணன் பதிலளித்தார்.

அ.தி மு.க. கூட்டணியில் ஒரு உறுப்பாக இருக்கும் ஜனதாக்கட்சி தமிழ்நாட்டில் இருக்கும் தமிழ் நாட்டில் 60 இடங்களில் போட்டியிட விரும்புவதாகவும் ஆனல் எதிர்வரும் சனிக்கிழமையன்று நடைபெறும் பேச்சுவார்த்தையின் பின்னர் மாறுதல் செய்யப்படலாம் என்றும் திரு லட்சுமணன் கூறினுர். (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி மஞ்சுளா **உத்தமன்**
FROM 28th FIRST-CLASS ACTION!
**Special Delivery**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—லதா
**உலகம் சுற்றும் வாலிபன்**

**லிடோ** (யாழ்.நகர்) Daily 10-30, 3-30, 6-30 & 9-30 போன்: 7698
**Arabian Adventure**
(Color)

**ராணி** குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்—சரோஜாதேவி—எம்.ஆர். ராதா
பாலாஜி—ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

**மனோஹரா** யாழ்ப்பாணம்
தினசரி 10-30 a.m., 2-30, 6-30, & 9-45 p.m
எம். ஜி. ஆர்- கே. ஆர். விஜயா
**நல்லநேரம்** (புதிய பிரதி)

2nd Crowded week
**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
**THAT MAN BOLT**
Entertainment in Karate, Judo and Kick-Boxing
**தற் மான் போல்ற்**
பயங்கர காராட்டி ஜுடோ நிறைந்த
ஆங்கில சண்டைப்படம்

2nd Crowded week
**REGAL** JAFFNA. Phone: 366
Daily at 10-30 a.m. 2-30, 4-30, 7-00 & 9-30 p.m
ROGER MOORE as JAMES BOND
**LIVE AND LET DIE**
(More suited for Adults)


# நவக்கால நற்சிந்தனை

## உதவியின்றி அவர்கள் நிற்கிறார்கள்!!

பல வருடங்களுக்கு முன்—பெத்லகமிலே, புன்னகை பூத்த அந்தக் குழந்தையைத் தன் கரங்களில் ஏந்தி நின்றிருந்தாள் அவள் ஆனால் கல் வாரிப் பாதையில் குருதிசிந்தி உருக்குலைந்த நிலையில் பார்க்கிறாள் தன் மகனை. உதவி புரிய முடியாதவளாய் வேதனைக் கடலில் மூழ்கி நின்றாள். ஆனால் அவள் அவருடைய பாடுகளில் பங்கேற்று நடந்தாள்.

இன்றும் எத்தனையோ தாய்மார்கள், குருதிபடிந்த கல்வாரிப் பாதையில் தமது அருமைச் செல்வங்களைச் சந்திக்கிறார்கள்.

நாள் முழுவதும் வேலை தேடியலைந்து, வேலையின்றிச் சோர்ந்துபோய் மாலையில் வீடு திரும்பும் மகனைப் பார்க்கிறாள்.

வீட்டில் உள்ளவற்றையும் எடுத்து வீணே செலவு செய்துவிட்டு, உல்லாசத்திலும், பொழுதுபோக்கிலும் நேரத்தைச் செலவழித்து வீடு திரும்பும் மகனையும் பார்க்கிறாள் இன்னொரு தாய்.

பிணியால் வருந்தும் தாய் தன் இளைய மகனை அழைத்து மூர்நமிட்டு பிச்சையெடுத்து வர அனுப்பும்போதும் அவர்கள் வேதனையோடு ஒருவரையொவரை பார்த்துக்கொள்கிறார்கள். உதவியின்றி நிற்கிறார்கள்.

நீயும் இவர்களைச் சந்திக்கிறாய்— அவர்களைக் கடந்து சென்றுவிடாதே!!

—வண. மேரிபஸ்ரிய அடிகள்


**நாகம்ஸ்** (கன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
**தெய்வம்**
(கலர்-புதிய பிரதி)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா
**கிருகப் பிரவேசம்**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
**கண்மணி ராஜா**
(புதிய பிரதி)


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 13-ந்திகதி
(26-3-80)

புதன்கிழமை

**மேடம்:** பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கும், சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கும், வெளியிடத்துத்தொடர்பும் வளரும்

**இடபம்:** வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும்.

**மிதுனம்:** சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லை அதிகரிக்கும், அரசியல் வாதிகளுக்கு அடிசறுக்கலாம், மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

**கடகம்:** எதற்கெடுத்தாலும் சிறி விழுவீர்கள், கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும், குடும்பத்திலும் பிரச்னைகள் தோன்றிமறையும்.

**சிங்கம்:** பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள். நினைத்த காரியம் கைகூடும். குடும்ப மகிழ்ச்சியும் உண்டு

**கன்னி:** தற்பெருமை மூலம் தடுமாற்றம். கண் துடைப்பு வேலைகள் நடைபெறும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

**துலாம்:** வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம் பெறும். ஆசிரியர்கள் போற்றப்படுவர். தொழில் துறையிலும் நன்மாற்றமுண்டு.

**விருச்சிகம்:** புத்திரர்களால் பெரும் மகிழ்ச்சிக்கிடமுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும், வணிகர்கள் வாழ்க்கை வளமாகும்.

**தனுசு:** எதிர்பாராதவிபத்திற்கு மிடமேற்படலாம். அபாயகாரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். வெளியிடத்துப் பயணமும் ஏற்படலாம்.

**மகரம்:** குடும்பம் இன்று கலைக்கோவிலாக மாறும். களஸ்திரவழியாலும் நன்மையுண்டு. பெற்றோரின் ஒத்துழைப்பும் அவசியம் உண்டு.

**கும்பம்:** விஷப் பரீட்சையின் மூலம் விபரீதம் விளையலாம். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். மௌனமே விரும்பத்தக்கது.

**மீனம்:** நினைத்தது ஜெயம். தந்தைவழிமூலம் சுகமுமுண்டு பூமி விருத்தியுமுண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# விவசாயப் பொருட்காட்சி

[சரவணை]

புங்குடுதீவு கமத்தொழில் நிலையத்தில் தீவுப்பகுதி இளைஞர் விவசாயக் கழக ஆதரவில் விவசாயப் பொருட்காட்சி ஒன்றை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் திறந்து வைத்தார்.

தீவுப்பகுதி எம்.பி.பண்டிதர் கா. பொ. இரத்தினம், புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் திரு. வீ. வ. நல்லதம்பி, திருமதி பூராசா ஆகியோர் வ்வைபவத்தில் உரை நிகழ்த்தினர். (அ)

# தாயார் கண்டித்ததால் தற்கொலை

(மாவிட்டபுரப்)

வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்யாத மகளைத் தாயார் கண்டித்ததால் மனமுடைந்த யுவதி நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

பலாலியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஸ்ரீரஞ்சனி தேவி (வயது 20) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசி விசாரணை நடத்தினார். காலமானவரின் தாயார் பூதஞச்சிப்பிள்ளையின் சாட்சியத்தை அடுத்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் சிவநாதன் சாட்சிகளை ஆஜர் செய்தார். (கு)


வவுனியா தெற்கு, தமிழ் பிரிவு,
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வவுனியா

"இஸ்சுஸ் லொறி
பகிரங்க ஏல விற்பனை
16-04-1980"

22/7964 இலக்க இஸ்சுஸ் லொறி சங்க வளவில் 16-04-80ல் காலை 10-00 மணிக்கு நடைபெறவிருக்கும் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும். ஏலவிற்பனையில் பங்கு பற்றுபவர்கள் மீளப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 1000/- செலுத்தல் வேண்டும். பணம் கட்டுபவர்களே ஏலத்தில் பங்கு பற்றத் தகுதியுடையவராவர்.

மேற்படி லொறியை ஏல விற்பனையில் பெறுபவர் அன்று இறுதியாக கேட்கப்படும் பெறுமதியின் மூன்றிலொரு பகுதியை உடனடியாகச் செலுத்திப் பின் ஒரு கிழமைக்குள் மிகுதிப் பணத்தையும் செலுத்தி லொறியை சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்துதல வேண்டும்.

லொறியை சங்க வேலை நாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பார்வையிடலாம்.

ச. சுப்பிரமணியம்,
தலைவர்.

வ. தெ. த. பி. ப. நோ. கூ. சங்கம்,
வவுனியா.

5298

கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் வெற்றிநடை போடுகின்றது
தினசரி 10-00, 1-30, 4-30, 7-15, 10-00
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
"கிழக்கே போகும் ரயில்" புகழ்
★ சுதாகர் ★ ராதிகா ★ விஜயன்
★ ரதி ★ பாக்கியராஜ் ★ கலா
மற்றும் பலர் நடித்த
காதல், இசை, நிறைந்த நிந்தமிழ் திரையோவியம்
**நிறம் மாறுத பூக்கள்**
(வண்ணப்படம்)
திரைக்கதை டைரக்ஷன்:
வெள்ளிவிழா இயக்குநர்
பாரதிராஜா
இசையமைப்பு:
இளையராஜா
முக்கிய குறிப்பு:
இரவு 7-15க்கு காண்பிக்கப்படும் காட்சி 9-40க்கு முடிவடையும்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(கலர் பிரதி)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.
(சுன்னுகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## தர்மர் வெளிநாடு பயணமானர்

(கொழும்பு)
மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் நேற்று முன்தினம் மோல்டா பயணமானர்.
அங்கு நடைபெறும் சர்வதேச மகாநாடு ஒன்றில் கலந்து கொள்ளும் இலங்கைக் குழுவிற்குத் தலைமைதாங்கிச் செல்லும் திரு. தர்மலிங்கம் ஆசிய ஆபிரிக்க நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே செல்கிருர். இச்சங்கத்தின் உபதலைவர்களில் திரு. தர்மலிங்கமும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# காலியில் காலரா

காலி மாவட்டத்தில் வாந்திபேதி நோய் (காலரா) பரவியுள்ளதாகவும், உடனடிதுரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் காலி சுகாதாரசேவைகள் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.
காலி ஆஸ்பத்திரியில், மூன்று பிள்ளைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"எழுத்தாளன்

## வெறும் யதார்த்தத்தால் திருப்திகண்டுவிட முடியாது"

(யாழ்ப்பாணம்)
"இலக்கியத்தில் வெறும் யதார்த்தத்தை மட்டும் சித்தரிப்பதன் மூலம் ஒரு எழுத்தாளர் திருப்தி கண்டுவிடமுடியாது தனக்கும் தனது எழுத்துக்கும் இருக்கவேண்டிய சமுதாயக் கடமையை சரிவர உணர்ந்து மக்களுடைய வாழ்க்கைக்கும், தேவைக்கும் ஏற்ற விதத்தில் இலக்கிய ஆக்கங்களில் ஈடுபடுபவனே உண்மையான எழுத்தாளன்"
மேற்கண்டவாறு தேசிய கலை இலக்கியப் பேரவை வீரசிங்கம் மண்டபத்தில் மலையகச் சிறுகதைத் தொகுதிகள் இரண்டுக்கும் நடத்திய ஆய்வரங்கில் ஆசிரியர் எம். சின்னத்தம்பி பேசும்போது கூறினர். அ. சந்திரகாசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆய்வரங்கில் பேராசிரியர் கைலாசபதி பேசுகையில், ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரப்பானது இன்று பல முக்கியஅம்சங்களுக்குத் தீர்க்கமான வழி சமைக்கவேண்டிய நிலையில் உள்ளது. எனவே கடந்தகாலம் சரியானமுறையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் மேலும் செழுமையான இலக்கியத்தையும், உறுதிமிக்க எழுத்தாளர்களையும் உருவாக்கமுடியும் எனக் கூறினர்.
திரு. சி. மௌனகுரு பேசுகையில், "எழுபதாம் ஆண்டுக்குப்பின் எழுந்த காலங்களில் ஈழத்து முற்போக்கு இலக்கியம் சற்று தேக்கமடைந்துள்ளது. இந்நிலைக்குத் தென்னிந்திய இலக்கியங்களின் தாக்கம் ஒரு காரணமாக இருந்த போதிலும் நமது நாட்டில் ஏற்பட்டுள்ள தேக்கநிலைக்கான காரணங்களைக்கண்டு கொள்வதும், அதில் இருந்து மீட்சி பெறுவதும் அவசியமாகும்" என்று கூறினர்.
திரு. கே. செந்தில்வேல் பேசும்போது, "மலையக மக்கள் மத்தியில் இருந்து இரண்டு சிறுகதைத் தொகுதிகள் அண்மையில் வெளிவந்துள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கவை. அதேவேளை அவ்வாறான மலையக இலக்கிய ஆக்கங்கள் குறுகிய பிரதேசவாதத்தையோ தனிமைப்படும் கருத்துக்களையோ தாங்கி வருவதாக அமைபக்கூடாது. அத்தகைய இலக்கிய ஆக்கங்கள் மலையக மக்களின் உண்மையான விடுதலைப் பாதைக்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிடும் என்பதை மலையக எழுத்தாளர்கள் கவனத்தில்கொள்வது அவசியம்" என்று கூறினர்.
மு. நித்தியானந்தன், சோ. தேவராசா ஆகியோரும் உரையாற்றினர். (அ)

## இன்று

[வட்டுக்கோட்டை]
சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய இன்றையத் திருவிழாவில் 'முத்தமிழரசி' திருமதி வசந்தா வைத்தியநாதன் 'தாயன்பு' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார். திரு. என். கே. பத்மநாதன், திரு. வி. கே. கானமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம் பெறும். (வெ)

## சிறந்த 10 மாணவர்

(புங்குடுதீவு)
தொகுதி ஒவ்வொன்றிலுமிருந்தும் மிகச்சிறந்த மாணவர்கள் பத்துப் பேரைத் தெரிவு செய்து பாராட்டுவது என்ற கல்வி அமைச்சின் திட்டத்திற்கு அமைய ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்தும் மிகச் சிறந்த மாணவர்களாக பத்து மாணவ, மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
பிரஸ்தாப மாணவ மாணவிகள் இத்தொகுதியிலுள்ளவேலணைக் கல்வி வட்டாரத்திலிருந்தும், புங்குடுதீவுக் கல்வி வட்டாரத்திலிருந்தும் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான பாராட்டுவிழா வேலணைக் கல்வி வட்டாரத்தில் நடைபெறவுள்ளதாக வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேஷன் தெரிவித்தார்.

இப்பாராட்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராக காவலூரர் எம். பி. திரு. கா பொ இரத்தினம் கலந்துகொள்வார். [உடுப். அ]

யாழ். ஆஸ்பத்திரி:

## நள்ளிரவில் பிடிபட்ட இளைஞர்!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பின் மதிலால் ஏற முயன்ற ஒரு இளைஞரை பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தார்.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு பாதுகாப்புசேவை உத்தியோகத்தர் திரு. ஞானப்பிரகாசம் மத்தியூஸ் கடமையிலீடுபட்டிருந்தபோது இளைஞர் ஒருவர் ஆஸ்பத்திரி மதிலில் ஏறுவதைக்கண்டு ஓடோடிச் சென்று பிடித்துக்கொண்டார்.
அந்த இளைஞர் யாழ். ஆஸ்பத்திரி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (க)

கோப்பாய்

## மரக்காலையை மூடாதீர்!

### அமைச்சருக்கு எம்.பி. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
கோப்பாயிலுள்ள மரக்காலையை மூடவேண்டாமென்றும், இதனை நடத்த வேறு காணி இருக்கிறதென்றும், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப் பிள்ளை காணிஅபிவிருத்திஅமைச்சர்திரு. காமினி திசநாயக்காவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில்தெரிவித்துள்ளார்.
மரக்காலையை மூடுவதால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டப்படுவார்கள் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.
மரக் கூட்டுத்தாபனத் தலைவர், யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் ஆகியோருக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க)

## முதல்நாளே...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
றரை மணி நேரத்துக்குப் பின்னர் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டு வந்த பகல் ரயில் சுன்னுகம் வந்துசேர்ந்ததன் பலனுக இந்த ரயிலின் என்ஜின் கடுகதி ரயிலுடன் இணைக்கப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்தப்பட்டது.
இதன் எதிரொலியாக இப்புதிய கடுகதி ரயில் சேவை முதல் நாளன்று நூற்றுப் பத்து நிமிட நேரம் தாமதித்து சரியாக இரவு 8-15க்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது.
இதன் காரணமாக 6-25க்குப் புறப்படும் கடுகதி ரயிலில் சௌகரியமாகப் பிரயாணம் மேற்கொள்ளவிருந்தவர்கள் குழப்பமடைந்து 'இரவு மெயில் வண்டியில் செல்வதா அல்லது கடுகதி ரயிலில் செல்வதா' என்று தடுமாறி கடைசியில் சரியான நேரத்துக்குப் புறப்பட்ட மெயில் ரயில் வண்டியிலேயே தங்களின் பயணத்தை மேற்கொண்டனர்.

யாழ். புல்லுக்குளம்:

## அபிவிருத்தித்திட்டம் ஒத்திவைப்பு ஏன்?

### வரியிறுப்பாளர் கவலை

(யாழ்ப்பாணம்)
சுமார் 8 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவிருந்த யாழ்ப்பாணம் புல்லுக்குளஅபிவிருத்தித்திட்டம் சிலஅரசியல் காரணத்திற்காக பின்போடப்பட்டுள்ளதா என்ற கேள்வி யாழ். வரியிறுப்பாளர் மத்தியில் எழுந்துள்ளது.
யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ். நகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் ஆகியோர் 8 லட்சம் ரூபா செலவில் புல்லுக்குள அபிவிருத்தி வேலையைஆரம்பிக்கத் தீர்மானித்திருந்தனர்.
புல்லுக்குள வீதியை விஸ்தரித்து, குளத்தின் மத்தியில் மேடை அமைத்து, யாழ். நகருக்கு அழகூட்டும் விதத்தில், ஒரு திட்டமும் வகுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு, யாழ் மாநகரசபை 5 லட்சம் ரூபா வழங்கவேண்டுமென்றும், அரசாங்க அதிபர், 3லட்சம் வழங்குவதென்றும், வேலையை இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.
ஆனாலும் இத்திட்டம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் நகர அபிவிருத்திச்சபை பொறுப்பேற்றுச் செய்ய அச்சபையுடன் கூட்டணியினர் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் அதுவரை இத் திட்டத்தைப் பின்போடுவதென்றும், கூட்டணித் தலைவர்கள் தீர்மானித்ததாக தெரியவருகிறது.
கூட்டணியினர் இத்திட்டத்தைப் பின்போட்டுவிட்டனரா என்ற கேள்வியும் வரியிறுப்பாளர் மத்தியில் இப்பொழுது எழுந்துள்ளது.
நகரில் எத்தனையோ அபிவிருத்திகள் செய்யவேண்டியிருக்கும்போது, இத்திட்டத்திற்குத்தான் நகர அபிவிருத்திச் சபையை நாடவேண்டுமா என்று யாழ். மாநகரசபை உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.
யாழ். அரசாங்க அதிபர் புல்லுக்குள அபிவிருத்தித்திட்டத்திற்கு தருவதாகத் தெரிவித்த 3 லட்சம் ரூபாவைப் பயன்படுத்தாமல் விடுவது எவ்வகையிலும் சரியான செயலாக இருக்காது என்று தெரிவிக்கப்படுகிறது.

"வைத்தியசாலைகளில் நோயாளருக்கு

## உணவு தடைப்படாது வழங்க நடவடிக்கை எடுக்கவும்"

### சுகாதார அமைச்சு உத்தரவு!

[யாழ்ப்பாணம்]
"அரசாங்க வைத்தியசாலை வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு உணவு வழங்குவதற்கென ஒப்பந்தம்செய்துகொண்ட ஒப்பந்தக்காரர்கள் உணவுவழங்க தவறிவிடும் சந்தர்ப்பங்களில், அந்த நோயாளர்களுக்கு தடைப்படாது தொடர்ந்து உணவு வழங்குவதற்கு மாற்று நடவடிக்கை உடன்மேற்கொள்ளப்படவேண்டும்"
இவ்வாறு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு சகல மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கும் கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையொன்றில் கேட்டுள்ளது.
பல வைத்தியசாலைகளில் உணவு ஒப்பந்தக்காரர்கள் நோயாளர்களுக்கு உணவு வழங்குவதை திடீரெனநிறுத்திவிடுவதினுல் நோயாளர்கள் உணவுபெறமுடியாது மிகவும் சிரமப்பட்டு வருவதாக கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே மேற்படி பணிப்புரையை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது. [பண். திரு]

## "அடியார்களுக்கு பேரின்பம் அளிப்பது கந்தரனுபூதி"

(சுழிபுரம்)
"முருகப் பெருமானின் திருவருட்பேற்றில் திளைத்தவர் அருணகிரிநாதர். அவரால் அருளப்பெற்ற சிறந்த நூல்களுள் திருப்புகழ், கந்தரலங்கார்ரம் அநுபூதி என்பன ஒப்புயர்வற்றன. அநுபூதி ஐம்பத்தொரு பாடல்களைக் கொண்டு சந்தக் கலிவிருத்தப்பாவால் இவை இயந்தவை அருமையும் பெருமையும் வாய்ந்த தத்துவக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்ந்து அடியார்களுக்குப் பேரின்பமளிப்பது இவ்வாறு சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்றுவரும் கந்தரநுபூதி விரிவுரையில் பேசுகையில் குறிப்பிட்டார்.
பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இவ் விரிவுரையில் வித்துவான் மு. சபாரத்தினம் மேலும் பேசுகையில் கந்தர்அநுபூதி என்ற தொடர்மொழி கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி என்று இரண்டாம் வேற்றுமை உருவும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடராயும் கந்தராய் அடையும் அநுபூதி என மூன்றும் வேற்றுமை உருவும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத்' தொடராயும் கந்தரின்கான் அடையும் அநுபூதி ஏழாம் வேற்றுமை உருவும் பயனும் உடன் தொக்க தொகைநிலைத் தொடராயும் விரியும். விநாயகப் பெருமானது பரத்துவத்தைக் குறிப்பிட்ட விரும்பிய அருணகிரி ஐந்து சரத்தினையும் சுட்டி அதன் மூலம் ஐந்தொழில்களையும் இயற்றுகின்றவரான சிவபெருமானின் வேறிலார் விநாயகர் என்பதைப் பெறவைக்கின்ருர்.
திரு. க. வாமதேவன் நன்றி தெரிவித்துப் கூறினர். (ச)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெ[illegible] பத்திராராக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில்
மார்ச்மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெ[illegible] வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office [illegible] 78 The Eelanadu, P. B. No. 49, Telegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org